# முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஹூஸ்டன் தமிழ் ஆய்வுகள் இருக்கை அமைப்பின் செயலாளர் பெருமாள் அண்ணாமலை சந்திப்பு!

சென்னை, ஜூலை 20-

தமிழ்நாடு அரசு, அயல்நாடுகளில் தமிழ் இருக்கைகள் அமைப்பதன் மூலம் அயல்நாடுகளில் தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு சங்கத்தமிழ் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளுதல், ஆராய்ச்சிக் கல்வியில் தமிழ் இலக்கியம், இலக்கணம், பண்பாடு தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளும் வகையில் மாணவர்களை உருவாக்குதல், நூலகங்களிலும் ஆவணக் காப்பகங்களிலும் உள்ள தமிழ் தொடர்பான ஆவணங்களை ஆய்வுக்குட்படுத்துதல், பதிப்பிக்கப்படாத ஆவணங்களைப் படியெடுத்து பதிப்பிக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு பணிகள் மூலம் தமிழ் மொழியின் வளம் உலகறியச் செய்திடவும் ஏராளமான நாடுகளில் தமிழ் இருக்கை அமைத்திட தாராளமான நிதியுதவியினை வழங்கிவருகிறது.

இதற்குச் சான்றாக மொரீசியஸ், மகாத்மா காந்தி நிறுவனத்திற்கு ரூ.1,00,00,000/-யும், அமெரிக்கா, ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்கு ரூ.10,00,00,000/-யும் கனடா, டொராண்டோ பல்கலைக்கழகத்திற்கு ரூ.1,00,00,000/-யும் ஜெர்மன், கொலோன் பல்கலைக்கழகத்திற்கு ரூ. 1,25,00,000/-யும் வழங்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் 1927ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம், பண்பாடு மற்றும் பொருளாதாரம் சார்ந்த திறனாற்றல் குறித்த ஆராய்ச்சிக்காக ஒரு தமிழ் இருக்கையை நிறுவிட தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.3,44,41,750/- (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்து நான்கு இலட்சத்து நாற்பத்து ஓராயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) வழங்கியுள்ளது.

50 ஆண்டு காலமாக தமிழர்கள் வாழும் அமெரிக்காவின் நான்காவது மிகப்பெரிய நகரான ஹூஸ்டன் மாநகரில் அமைந்துள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் 2023 செப்டர்பர் முதல் வாரத்தில் தமிழ் இருக்கையின் தொடக்க விழா நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஹூஸ்டன் தமிழ் ஆய்வுகள் இருக்கை அமைப்பின் (Houston Tamil Studies Chair.Inc) செயலாளர் பெருமாள் அண்ணாமலை அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தமிழ் இருக்கை தொடக்க விழாவில் கலந்துகொள்ள அழைக்கும் பொருட்டு இன்று (19.07.2023-புதன் கிழமை) முற்பகல் தலைமைச்செயலகத்தில் சந்தித்தார். இச்சந்திப்பின் போது தமிழ்நாடு அரசு இதுவரை வழங்கிய தொகைக்கு நன்றியைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

# மக்களிடம் துரிதமாக கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்திடுவீர்!

### ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வலியுறுத்தல்!



சென்னை, ஜூலை 20-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் நேற்று (19.07.2023) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்குவது தொடர்பான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜகநாதன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் நா.சுப்பையன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வு) திருமதி. விஜயராணி உட்பட கூடுதல் பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது :

முதலமைச்சர் அவர்கள் தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளை அளித்தார்கள். ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் சில வாக்குறுதிகளையும் தொடர்ந்து பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார்கள். அந்த வகையில், முத்தாய்ப்பான பொதுமக்களால் மிகுந்து எதிர்பார்க்கப்பட்ட வாக்குறுதிதான் குடும்பத் தலைவிகளுக்கு உரிமைத் தொகை வழங்குகின்ற வாக்குறுதி. அந்த வாக்குறுதியினை நிறைவேற்றுகின்ற வகையிலே முதலமைச்சர் அவர்கள் பல்வேறு வகையான ஆலோசனைகளை செய்து, அதற்கான வியூகங்கள், திட்டங்களை வகுத்து, நிதி ஆதாரங்களை ஒதுக்கி, இப்போது அதை எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்கான வழிகாட்டுதல்களையும் தந்துள்ளார்கள்.

அந்தவகையில் பல்வேறு துறைகள் இந்த பணிக்காக பணிக்கப்பட்டுள்ளார்கள். அதில் கூட்டுறவுத்துறை அனைத்து நியாயவிலைக் கடையில் இருக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை அவர்களது வீடுகளிலே கொண்டு சேர்க்கும் பணியினை முதற்கட்டமாக வழங்கியுள்ளார்கள். அதை இரண்டு பிரிவுகளாக, முதற்கட்டமாக வருகின்ற 24ஆம் தேதி முதல் முகாம்கள் தொடங்க இருக்கிறது. அதற்கு முன்னதாக நியாயவிலைக்கடை ஊழியர்கள் மூலமாக விண்ணப்பங்களை அவர்களது இல்லங்களுக்கு கொண்டு செல்லும் பணியினை மேற்கொள்வார்கள். விண்ணப்பங்கள் வழங்கும் போது, உரிமைத்தொகை விண்ணப்பங்களை 24ஆம் தேதி முதல் எப்போது திரும்ப முகாம்களில் வழங்க வேண்டும் என்ற விவரத்தை தெரிவிப்பார்கள். இந்தப்பணியானது வருகின்ற ஆகஸ்ட் 4 ஆம் தேதி வரை நடைபெறும்.

பின்னர். இரண்டாம் கட்டமாக ஆகஸ்ட் 5 ஆம் தேதி முதல் இந்தப்பணி நடக்கும்.

விண்ணப்பங்கள் வழங்கும் போது,வங்கி கணக்கு இல்லாத பயனாளர்களை வங்கி கணக்கு துவக்க வைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளபட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகளில் தற்போது 75000 முதல் 100000 வரையிலான புதிய வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளது. இது ஒரு மகிழ்ச்சியான செய்தி. மேலும், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு 21 இலட்சம் புதிய வங்கி கணக்குகள் தொடங்க வழிவகை செய்யப்படும். பொது விநியோகத்திட்டத்தில் எவ்வித பாதிப்பும் இல்லாமல், இப்பணிகளுக்கான பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியினை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இப்பணிகளை கண்காணிக்க மூன்று மாவட்டங்களுக்கு ஒரு கூடுதல் பதிவாளர் என அனைத்து மாவட்டங்களுக்கும் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.


**வாட்ஸ் அப்பில் வந்தது!**

**எங்க கூட்டணி-க்கு பெயர்**

**INDIA**

**எங்களுக்கு எதிரான உங்க கூட்டணியை நாங்க எப்படி கூப்பிடறது?**

**ANTI INDIA**


# தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா தொடர் நிகழ்ச்சிகள்!



### மாவட்டக் கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

| நாள், நேரம் | நிகழ்ச்சி விபரம் | தலைப்பு / சொற்பொழிவாளர்கள் | இடம் | ஏற்பாடு |
|---|---|---|---|---|
| 26.07.2023 காலை 10.00 மணி | மகளிர் கருத்தரங்கு | கலைஞரும், தமிழின் மாட்சியும் - புதுக்கோட்டை விஜயா<br>கலைஞர் ஆட்சியும் மகளிர் மாட்சியும்- - ஆரணி மாலா | SVR மண்டபம் PTR. காலனி கம்பம் ரோடு, உத்தமபாளையம். | மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி |
| மதியம் 12.00 மணி | மகளிர் நலத்திட்டம் | பொருளாதாரத்தில் நலிவடைந்த மகளிருக்கு தையல் இயந்திரம் வழங்குதல். | | மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி |
| 28.07.2023 காலை 10.00 மணி | கருத்தரங்கம் | திராவிடம் - நேற்று, இன்று, நாளை- தமிழன் பிரசன்னா<br>சமூகநீதி, மொழிப்பற்றில் திராவிடம் ராஜீவ்காந்தி | R.M.S.மாயாண்டி பிள்ளை - வேலம்மாள் திருமண மண்டபம், சின்னமனூர். | மாவட்ட இளைஞர் அணி |
| 28.07.2023 மாலை 6.00 மணி | பொதுக்கூட்டம் | முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் -தமிழன் பிரசன்னா, ராஜீவ்காந்தி | தேரடி திடல், உத்தமபாளையம். | உத்தமபாளையம் (கிழக்கு) ஒன்றியம் மற்றும் உத்தமபாளையம் பேரூர் |
| 29.07.2023 காலை 10.00 மணி | கருத்தரங்கம் | நவின தமிழகத்தின் சிற்பி கலைஞர் - - தமிழன் பிரசன்னா,<br>இந்திய அரசியலில் கலைஞர் ராஜீவ்காந்தி | ஓம் சக்தி மஹால் கொண்டமநாயக்கன்பட்டி, ஆண்டிபட்டி. | ஆண்டிபட்டி பேரூர் மற்றும் ஆண்டிபட்டி ஒன்றியம் |
| 31.07.2023 காலை 10.00 மணி | மருத்துவ முகாம் | சர்க்கரை நோய், சிறுநீரகம் சம்பந்தமான சிறப்பு மருத்துவ முகாம். | காமராஜர் நாடார் உறவின்முறை திருமண மண்டபம், தேவாரம். | தேவாரம் பேரூர் மற்றும் உத்தமபாளையம் (மேற்கு) ஒன்றியம் |
| 02.08.2023 காலை 10.00 மணி | கருத்தரங்கம் | இலக்கியத்தில் கலைஞர் - கம்பம் பெ.செல்வேந்திரன்<br>கலைத்துறையில் கலைஞர்- திரைப்பட நடிகர் ஜொமல்லூரி | JSD. மஹால், கம்பம் | கம்பம் வடக்கு, தெற்கு நகர தி.மு.க. |
| மதியம் 12.00 மணி | நலத்திட்ட உதவிகள் | நலிவடைந்த முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு முடிதிருத்தும் சுழல் நாற்காலி வழங்குதல்.<br>சலவைத் தொழிலாளர்களுக்கு தேய்ப்பு பெட்டி வழங்குதல். | | |
| 05.08.2023 காலை 10.00 மணி | பொற்கிழி வழங்குதல் | ஆண்டிபட்டி கிழக்கு, மேற்கு ஒன்றியத்தில் உள்ள கழக மூத்த உறுப்பினர்களுக்கு பொற்கிழி வழங்குதல். | ஒன்றியக்கழக அலுவலகம், ஆண்டிபட்டி. | ஆண்டிபட்டி ஒன்றியம் |
| 06.08.2023 காலை 10.00 மணி | மருத்துவ முகாம் | பொது மருத்துவ முகாம் | காமராஜர் நாடார் உறவின்முறை திருமண மண்டபம், தேவாரம். | தேவாரம் பேரூர் மற்றும் உத்தமபாளையம் (மேற்கு) ஒன்றியம் |
| 07.08.2023 காலை 10.00 மணி | பொற்கிழி வழங்குதல் | சின்னமனூர் கிழக்கு ஒன்றியத்தில் உள்ள கழக மூத்த உறுப்பினர்களுக்கு பொற்கிழி வழங்குதல். | நந்தகோபால சுவாமி திருமண மண்டபம், ஓடைப்பட்டி. | சின்னமனூர் (கிழக்கு) ஒன்றியம் |
| 12.08.2023 13.08.2023 | இறகுப்பந்து விளையாட்டுப் போட்டி | 100 அணிகள் கலந்து கொள்ளும் மாபெரும் இறகுப்பந்து விளையாட்டுப்போட்டி. | CBC உள் விளையாட்டு அரங்கம், கம்பம் | மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி |
| 13.08.2023 | கண் மருத்துவ முகாம் | இலவச கண் கண்ணாடி வழங்குதல் மற்றும் கண் அறுவை சிகிச்சை செய்ய ஏற்பாடு. | காமராஜர் நாடார் உறவின்முறை திருமண மண்டபம், தேவாரம். | தேவாரம் பேரூர் மற்றும் உத்தமபாளையம் (மேற்கு) ஒன்றியம் |

**கம்பம் நா.இராமகிருஷ்ணன்,**
செயலாளர்
தேனி தெற்கு மாவட்ட தி.மு.க.

## 44 ஆம் ஆண்டில்

# முரசு கொட்டும் கழக இளைஞர் அணி!



திமுக! தமிழ் நாட்டின் சுயமரியாதைச் சுடர்! ஆங்கிலத்தில் "Ray of hope" என்று சொல்லுவார்கள்.அப்படி தமிழ்நாட்டின் நம்பிக்கை ஒளிக்கீற்றாய் விளங்கும் திமுக,இன்று தென்னகத்தில் இருந்து புறப்பட்டு ஒட்டுமொத்த இந்தியாவுக்கான திசை காட்டியாய் வளர்ந்து நிற்கிறது.

நீதிக்கட்சி தொடங்கி திமுக வரை திராவிட இயக்கத்தின் பயணம் என்பது ஒரு நூற்றாண்டு கால வரலாறு. இன்றைக்கு சொந்த கட்சியில் ஆளுக்கொரு அணியாய் கூறு போட்டு கொண்டிருக்கும் கட்சிகளின் மத்தியில் திமுக எனும் மாபெரும் மக்கள் இயக்கத்தை தாங்கி நிற்கும் தூண்களாக மகளிரணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவரணி, மருத்துவர் அணி என்று பல அணிகள் அணிவகுத்து நிற்கின்றன.

அவற்றுள் இளைஞரணி கழகத்தின் இதயம் போன்றது. சூடு குறையா இளைய இரத்தத்தை கழக்கத்துள் பாய்ச்சி கட்சியை இளமைத் துடிப்புடன் வைத்துக் கொள்ளும் மிக முக்கிய பொறுப்பு இளைஞரணியினுடையது.

1949 செப்டம்பர் 17 இல் சென்னை ஜார்ஜ் டவுன், பவளக்காரத் தெருவில் திமுக உதயமான போது அறிஞர் அண்ணாவின் வயது 40. கலைஞரும் பேராசிரியரும் 25 வயதே ஆன இளங்கன்றுகள். எங்கெங்கு திரும்பினும் திமுக இளைஞர்களின் இடிமுழக்கத்தால் அதிர்ந்தது தமிழக அரசியல் களம். காலங்கள் ஓடின. கழகத்தின் கொடி பட்டொளி வீசி பறந்தது. கழகம் உதயமான போது உடனிருந்த தோழர்கள், தொண்டர்கள் நடுத்தர வயதை எட்டி இருந்தனர்.

அப்போது கழகத்தின் மீது மாறா பற்று கொண்ட மாணவர் ஒருவரால் 1968 ஆம் ஆண்டில் ஒரு முடி திருத்தும் கடையொன்றில் தொடங்கப்பட்டது தான் "கோபாலபுரம் இளைஞர் திமுக".அந்த மாணவச் செம்மல் தான் நமது இன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சரும் திமுகவின் தலைவருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.அன்று அவர் போட்ட விதை தான் 1980 சூலை 20 அன்று மதுரை ஜான்சி ராணி திடலில் தி.மு.க. இளைஞரணியாக உதயமானது.

இந்தியாவிலேயே மாநில கட்சியொன்றின் சார்பில் இளைஞர் அணி எனத் தனிப்பிரிவைத் தொடங்கிய முதல் கட்சி தி.மு.க தான்.

பின்னர் 1982 ஆகஸ்ட் மாதம் திருச்சியில் நடைபெற்ற தி.மு.க நிர்வாகிகள் கூட்டத்தில், கழக இளைஞரணி அமைப்புக்குழு உறுப்பினர்களாக இன்றைய முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க ஸ்டாலின் உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டனர். 1983 ஆம் ஆண்டு இளைஞரணி செயலாளர் பொறுப்பு, தலைவர் ஸ்டாலின் அவர்களுக்கு வழங்கப்பட்டது. திருச்சி சிவா மற்றும் தாரை மணியன் ஆகியோர் துணை செயலாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். அன்றைய தளபதி,இன்றைய தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அந்த இளைஞர் படை தமிழ்நாடு முழுக்க பயணம் செய்தது. பட்டி தொட்டி எங்கும் திராவிடர் இயக்க வரலாற்றை,அதன் கொள்கைகளை அன்றைய இளைய சமுதாயத்தினரிடம் கொண்டு போய் சேர்த்தனர்.கழகம் புத்துணர்ச்சி அடைந்தது.

இது "வெண் புறாக்களின் வெள்ளோட்டம்"என முத்தமிழறிஞர் கலைஞர் புகழாரம் சூட்டினார்.

சென்னை மாநகர மேயர்,அமைச்சர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து வந்தாலும் மூன்று பத்தாண்டுகள் தி.மு.க. இளைஞரணியின் தலைவராக, பிதாமகராக திறம்பட செயலாற்றினார் நமது முதலமைச்சர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களைத் தொடர்ந்து தலைவருக்கு பின் 2017 முதல் 2019 ஆம் ஆண்டு வரை வெள்ளக் கோயில்.சாமிநாதன் அவர்கள் அப்பொறுப்பினை ஏற்று சிறப்புறச் செயல்பட்டார்.

அவருக்குப் பின் 2019 ஆம் ஆண்டு இனமான பேராசிரியர் அவர்களால் திமுக இளைஞரணி செயலாளராக நியமிக்கப்பட்டார் இன்றைய நமது இளையோர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

அன்று கழகம் தொய்வடைந்துவிட்டதாக எதிர்க்கட்சிகள் கொக்கரித்த போது இளைஞர் படையோடு வீதியில் இறங்கி புது ரத்தம் பாய்ச்சினார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இன்று இளைஞர்களுக்கு அரசியல் புரியாது, தெரியாது அவர்கள் இணையத்தில் மூழ்கி இருக்கின்றனர் என்ற அனைவரும் கூறி வந்தவேளையில் அதை சவாலாக எடுத்துக் கொண்டு களம் இறங்கிய கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தான் பொறுப்புக்கு வந்ததுமே 30 இலட்சம் புதிய உறுப்பினர்களை இளைஞரணியில் சேர்ப்பேன் என்று சூளுரைத்து அதை செய்தும் காட்டி வருகிறார்.

2019 நாடாளுமன்ற தேர்தல் பரப்புரையில் ஒற்றை செங்கலை வைத்து எதிர்க்கட்சிகளை ஓட விட்டதெல்லாம் புது வரலாறு. மூன்றாம் தலைமுறை வாக்காளர்களின் ஆதரவு யாருக்கு என்று எதிர்க்கட்சிகள் முழித்துக் கொண்டிருக்கும் போது, அவர்களை கழகத்தின் பக்கம் ஈர்த்து அழைத்து வருகிறார் உதயநிதி ஸ்டாலின்.

கட்சிக்கு இளையோரை அழைத்து வரும் அதேவேளையில் அவர்களுக்கு கழகத்தின் பாரம்பரியத்தை, பழம்பெரும் கட்சியினரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில்,பொற்கிழி வழங்கும் விழாக்களின் மூலம் கழக மூத்த முன்னோடிகளை அவர் தம் தூய உழைப்பினை கவுரவித்து வருகிறார்.இது கட்சியினரிடையே புது உற்சாகத்தை உண்டாக்கியுள்ளது.

20-07-2023 அன்று 44 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் கழகத்தின் இளைஞரணி, கழக இளைஞரணி செயலாளர்,விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அடுத்தடுத்த கட்டங்களை எட்டும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கட்சியினரை தாண்டி தமிழக மக்களிடையேயும் உள்ளது.

தாய்க் கழகத்தின்
தத்துவ சாறாய்
ஆலம் விழுதாய்
ஆயிரம் காலத்துப் பயிராய்
தி.மு.க. இளைஞர் அணி
திராவிடத்தின் தீப்பிழம்பாய்
44வது ஆண்டில் பயணிக்கிறது!

வாழ்க கழகம்,
வளர்க இளைஞர் அணி!



**முனைவர்.பி.பழனியப்பன்**
தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
மேனாள் உயர்கல்வித்துறை அமைச்சர்

# தமிழ்நாடு ஆளுநரை திரும்பப் பெற வேண்டும்!

### நாடாளுமன்றத்தில் டி.ஆர்.பாலு - திருச்சி சிவா நோட்டீஸ்!

புதுடெல்லி, ஜூலை 20-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி தனது தன்னிச்சையான போக்குகளால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக பொதுவெளியில் மனம் போன போக்கில் கருத்துக்களைக் கூறி, அரசமைப்பு சட்டத்தை அவமதித்து வருகிறார். தொடர்ந்து அவ்வாறு நடந்து வரும் ஆளுநரை திரும்பப்பெறக் கோரி கழக பொருளாளரும், மக்களவைக் கழகக் குழுத்தலைவருமான டி.ஆர். பாலு எம்.பி மற்றும் மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா எம். பி ஆகியோர் முறையே இரு அவைத்தலைவர்களுக்கும் நோட்டீஸ் அளித்துள்ளார்கள்.

மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு அவர்கள் நோட்டீசில் தெரிவித்ததாவது :

இந்த நோட்டீஸ் மூலமாக நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு அரசு மீது அரசமைப்பு சட்டத்துக்கு புறம்பாக உள்ளர்த்தத்துடன் ஆளுநர் கருத்துக்களை தெரிவித்து வருகிறார். அதனால் நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து, அவசர அவசியமாக ஆளுநரை திரும்பப்பெறுவது பற்றி விவாதிக்க வேண்டுகிறேன்.

மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா அவர்கள் நோட்டீசில் தெரிவித்ததாவது :

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் உரிமைகளையும், சட்டமன்ற அதிகார வரம்பையும் மீறி, மாநில மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொறுப்புகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ள தமிழக ஆளுநரை திரும்பப் பெற வேண்டி, மாநிலங்களவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து, அவசர அவசியமாக விவாதம் நடத்த அவைத்தலைவர் சம்மதம் தெரிவிக்க வேண்டும்."

இவ்வாறு அவை ஒத்திவைப்பு செய்து அவசர விவாதம் நடத்த நோட்டீஸ் அளிக்கப்பட்டது.

## ஒப்பந்த ஊழியர்களை

# பொதுத்துறை வங்கிகளில் நியமிக்கக் கூடாது!

### ஒன்றிய அரசுக்கு - பாரத ஸ்டேட் வங்கி முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்கள் கண்டனம்

திருச்சி, ஜூலை 19-

ஒன்றிய அரசு பொதுத் துறை வங்கிகளில் ஒப்பந்த ஊழியர்களை நியமனம் செய்யக்கூடாது என்று வலியுறுத்தி, பாரத ஸ்டேட் வங்கி முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இது குறித்து அதன் தலைவர் எஸ்.பி. இராமன் செயலாளர் எம்.கே. மூர்த்தி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 1969 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் நாள் வங்கிகள் நாட்டுமையாக்கப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க தினம். கடந்த 54 ஆண்டுகளாக வங்கித்துறை சமுதாய முன்னேற்றத்திலும் வியத்தகு வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

இன்றைய தினம் 1,10,000 பொதுத் துறை வங்கி கிளைகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட வங்கி வாடிக்கையாளர்கள் தரமான சேவையை தாமதமின்றி பெற்று வருகின்றனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு 90,520 ஆக இருந்த பொதுத் துறை வங்கிகளின் கிளைகள் 2022 ஆம் ஆண்டு 86,221 ஆக குறைந்திருப்பது வளர்ச்சியை நாடும் வங்கித்துறையில் அதிருப்தி அலைகளை உருவாக்கியுள்ளது. அதைப்போன்றே 2021 ஆம் ஆண்டு 8,07,048 ஆக இருந்த வங்கி ஊழியர்கள் அதிகாரிகள் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 7,94,040 ஆக குறைந்திருப்பது, பொதுத்துறை வங்கிகளில் வேலைப்பளுவை தாங்க முடியாத அளவு உயர்த்தி இருப்பதோடு, வாடிக்கையாளர் சேவையை பெருமளவு பாதிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

**பொதுத்துறை வங்கிகளில் ஏற்படும் காலியிடங்களை நிரப்ப ஒப்பந்த ஊழியர்களை நியமிக்கும் சட்ட விரோதப் போக்கு**

பொதுத்துறை வங்கிகளில் வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் பணி ஓய்வு. பணி நீக்கம், அகால மறைவு (Death, Dismissal & Retirement) ஆகியவற்றால் ஏற்படும் காலி இடங்களை நிரப்பாமல் விட்டு விட்டு ஒப்பந்த ஊழியர்களைக் கொண்டு சொற்ப ஊதியத்தில் நியமனம் செய்யும் பொதுத்துறை வங்கி நிர்வாகங்களை ஒன்றிய அரசு அனுமதிக்கக் கூடாது. ஒப்பந்த ஊழியர் ஒழிப்பு சட்டம் (ABOLITION OF CONTRACT LABOUR ACT 1970) நிறைவேற்றிய அரசே சட்ட விரோதமாக பொதுத்துறை வங்கிகளில் ஒப்பந்த ஊழியர்களை நியமிக்க அனுமதிக்கக் கூடாது.

**தனியார் துறை வங்கிகளின் வீழ்ச்சியும் வாடிக்கையாளர்களின் டெபாசிட்டுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பும்**

இந்திய வங்கித்துறையில் இதுவரை ஏறத்தாழ 738க்கும் மேற்பட்ட தனியார் வங்கிகள் திவாலாகி இருந்த இடம் தெரியாமல் போயுள்ளன. இத்தகைய சூழலில் வங்கிகளில் டெபாசிட் வைத்திருப்போருக்கு தற்போது உறுதிப்படுத்தப்படும் ஐந்து லட்சம் ரூபாய் இன்சூரன்ஸ் தொகையை ஐம்பது லட்சமாக உயர்த்த தொலை நோக்கோடு ஒன்றிய அரசு முடிவெடுத்து செயல்படுத்த முன் வரவேண்டும்.

**தனியார் துறை வங்கிகளை ஒன்றிய அரசு நாட்டுடமையாக்க முன் வரவேண்டும்**

பொதுத்துறை வங்கிகள் நாட்டுடமையாக்கப்பட்ட 55வது ஆண்டை வங்கித் துறையும், நாடும் கொண்டாடும் தருணத்தில், அனைத்து தனியார்துறை வங்கிளையும் நாட்டுடமையாக்க ஒன்றிய அரசு முன் வருவது மட்டும் தான் வங்கி வாடிக்கையாளர்களின் பணத்துக்கு பாதுகாப்பை அளிப்பதாகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உகந்ததாகவும் இருக்கும்.

இவ்வாறு அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

# தாம்பரம் மாநகர் எல்லையில் வரவேற்பு!

### எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜூலை 20 -

தாம்பரம் குரோம் பேட்டை எம்.ஐ.டி. கல்லூரி பவள விழாவில் கலந்து கொள்ள வருகை தரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது தொடர்பாக மாநகர செயலாளர் எஸ். ஆர். ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

20-7-2023 வியாழக் கிழமை காலை 9 மணி அளவில் சிட்லபாக்கம் அஸ்தினாபுரம் சந்திப்பு இடத்தில் தாம்பரம் குரோம்பேட்டை மெட்ராஸ் தொழில்நுட்ப கல்லூரின் (MIT) பவள விழாவில் கலந்து கொள்ள வருகை தரும் சமூக நீதி நாயகன் பள்ளி கல்வித்துறை மற்றும் உயர்கல்வி துறையின் புரட்சி நாயகன் கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களை தாம்பரம் மாநகர சார்பில் எனது தலைமையில் (எஸ் ஆர் ராஜா எம்எல்ஏ) வரவேற்று மகிழ உள்ளோம்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மேயர் துணை மேயர் மாநகரத்துக்கு உட்பட்ட மாவட்ட மாநகர பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் மண்டலக்குழு தலைவர்கள் முன்னாள் முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் பிற அணிகளின் நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பொதுமக்கள் என பெருந்திரளாய் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.